அண்ணல் அம்பேத்கரும் 'திராவிட மாடல்' ஆட்சியும்!

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், விதி 110 – இன் கீழ்,முதல்வர் மு.க.ஸ்டாலின் சீரிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். "வடக்கில் உதித்த சமத்துவச் சூரியன்! பலர்வாழ்வில் கிழக்காய் இருந்த பகலவன்! சமூகம் ஏற்படுத்திய ஏற்றத் தாழ்வை கல்வி, சட்டம், அரசியல் எழுச்சி மூலமாக, சமத்துவப் படுத்திய போராளி! "இருட்டறையில் இருக்குதடா உலகம்! சாதி இருக்கின்றதென் பவனும் இருக்கின்றானே!என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய வரிகளைப் போல, சாதிக் கொடுமையால்,இருண்ட உலகத்தை, தன்னுடைய பரந்த அறிவால், ஞானத்தால் விடிய வைத்த விடிவெள்ளி அண்ணல் அம்பேத்கர்! வேண்டாததை நீக்கிய சிற்பி! வேண்டியதைச் சேர்த்த ஓவியர்! அறிவுச்சுடராய் விளங்கி அரசியல் அமைப்புச் சட்டத்தை வகுத்துக் கொடுத்தவர்! அவருடைய கருத்துக்கள் ஆழமும்,விரிவும் கொண்டவை. எதிர்காலத்துக்கு ஒளிவிளக்கு அது!

உலக அரங்கில் இந்தியா மிகச் சிறந்த ஜனநாயக நாடு என்று உறுதிப்படுத்துகிற அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கித் தந்த மாமேதை டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் இன்று. இந்த நாளைச் சமத்துவ நாளாக அறிவித்தார். அதற்கேற்ப, தமிழ்நாடு முழுவதும் அனைவரும் உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஆணை பிறப்பித்து, அதன்படி கடந்த இரண்டு ஆண்டு காலமாக உறுதிமொழி ஏற்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

2003–ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 92வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்குப் (92nd Amendment Act–2003) பிறகு இந்திய அரசியலமைப்பு இன்று 26 பகுதிகளின் கீழ் 444 உறுப்புகளையும், 12 அட்டவணைகளையும் கொண்டு விளங்குகிறது. உலகில் மிகப் பெரியதாகவும்,நீளமானதாகவும் விளங்கும் நமது அரசியல் அமைப்புச் சட்டம் 1950 ஜனவரி திங்கள் 26ஆம் நாள் முதல் செயற்படத் தொடங்கியது. இந்திய அரசியல் சட்டம், நாட்டின் எழுதப்பட்ட ஆதாரம் மிக்க ஆவணமாக விளங்கக் கூடியது. இதில் பல்வேறு குறைபாடுகள் கொண்டிருந்த போதிலும், கூட்டாட்சிக்கும், ஒற்றை ஆட்சிக்கும் இடைப்பட்ட இல்லமாகவும், கலந்த கலவையாகவும் திகழ்கிறது.

இந்தியா ஓர் இறைமையுடைய – சோசலிச – மதசார்பற்ற சனநாயக குடியரசு நாடாகும் என்றும்; சமூக, பொருளாதார, அரசியல் அடிப்படையில் அனைவருக்கும் நீதி, எண்ணம், வெளிப்பாடு, நம்பிக்கை, வழிபாடு போன்றவற்றில் சுதந்திரமாகச் செயல்பட உதவும் என்றும்; சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற நீதி அம்சங்களைக் கொண்டு விளங்குகிறது என்றும் தன் முகப்புரையில் கூறுகிறது. கூட்டாட்சி, முற்றையாட்சி கூறுகள் கொண்ட அரசியல் அமைப்பை உடைய நாடு இந்தியா. ஒன்றிய – மாநில அரசுகளுக்கு இடையே முறையாக எல்லைகள் வகுக்கப்பட்டதில், தேவையான அதிகாரங்கள் மாநில அரசுக்கு வழங்கப்படவில்லை. அதனால் தான் மாநிலத் தன்னாட்சி எங்கும், இன்னும் முழக்கம் கேட்டுக் கொண்டிருக்கின்றது. அது அண்ணா அவர்களால் தொடங்கி, கலைஞர், தற்போது தளபதி மு.க. ஸ்டாலின் வரை மாநில சுயாட்சி முழக்கம் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

ஆட்சிமன்றம் (Excative) சட்டமன்றம் (Legislature) நீதிமன்றம் (Jadiciary) என்ற மூன்று ஜனநாயகத் தூண்களைக் கொண்டுள்ள நமது அரசியல் அமைப்புச் சட்டம்; நெகிழும் (Flexible) நெகிழாத் (Regid) தன்மை கொண்டுள்ளதாகும். இந்திய அரசியலமைப்பை உருவாக்கியகுழுவினர் கூட்டாட்சி என்று சொல்லையே பயன்படுத்தாமல் விட்டு விட்டு, இந்திய ஒன்றியம் (Indian union) என்று மட்டும் குறிப்பிட்டுள்ளனர். பாராளுமன்றம் முறை (Parliament System of Government) நமது அரசியல் சட்டம் வடித்துள்ளது. குடியரசுத் தலைவரின் தலைமையில் தான் ஒன்றிய அரசு செயல்படும் என்றும், இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகிர்கிறது!

ஆனால், ஒன்றியத்தில் பொறுப்பேற்றிருக்கும் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு, சர்வாதிகாரக் குணத்தோடு அரசியல் அமைப்புச் சட்டம் தந்துள்ள முகப்புரையில்1976–ஆம் ஆண்டு 42வது திருத்தத்திலுள்ள "சம நிலைமை நெறி சார்ந்த, சமய சார்பற்ற "என்ற வரியையும், "ஒருமைப்பாடு என்ற வரியையும் நீக்கிடப் பகீரத முயற்சி செய்து வருகிறது.

இதனை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள்; அண்ணா, கலைஞர் வழியில் நின்று சர்வாதிகாரத்திற்கு எதிராக, ஜனநாயக சக்திகளுடன் சேர்ந்து போர்க்குரல் கொடுத்து வருகிறார்.

அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள சில பிரிவுகளில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த மனித உரிமைகளுக்கு மாறாக உள்ளன என்று கூறித் தந்தை பெரியார் தம் வாழ்நாள் முழுவதும் போராடி வந்தார். அதனை ஏற்ற அம்பேத்கர் எழுதிய பேனா என்னுடையதுதான்; அதில் ஊற்றப்பட்ட "மையானது ஆரியத்திற்குச் சொந்தமானது! நான் எழுதப் பணிக்கப்பட்டவன்; அவ்வளவு தான் ...! என்று வருத்தத்தோடு குறிப்பிட்டார்.

இந்திய சமுதாய அமைப்பு ஒரு கோபுரம் போல் உள்ளது என்றால், அடித்தட்டில் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கின்றனர்; இந்த அமைப்பு கோபுரம் போல் உள்ள பொருளாதார அமைப்பைக் கவ்வி கொண்டுள்ளது; பொருளாதாரக் கோபுரத்தின் அடித்தளத்தில் தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாயக் கூலிகள் அடிமைகளாக அல்லது தீண்டப்படாதவர்களாக இருக்கிறார்கள்.இதனை எதிர்த்துத் தமிழ்நாட்டின் ரூசோ என்று அழைக்கப்பட்ட தந்தை பெரியாரும், டாக்டர் அம்பேத்கரும் சமகாலத்தில் போராட்டக் களத்தில் இருந்தனர்.

பொது உணவு விடுதிகள், ஆலயங்கள், புகைவண்டி நிலையங்கள், சத்திரங்கள், கல்விக்கூடங்கள், அலுவலகங்கள், நிறுவனங்கள் போன்ற பொது இடங்களில் பிராமணர்களுக்கும், பிறருக்கும் காட்டப்பட்டு வந்த வேறுபாடுகள் எனும் தீண்டாமைக் கொடுமைகளை எதிர்த்து காலமெல்லாம் பெரியார் போராடி வந்தார்.வைக்கம் வீதிகளிலும், சேரன்மாதேவி குருகுல போராட்டத்திலும் தீண்டாமை ஒழிப்புக்காகப் போராடிய பெரியாரின் பங்களிப்பு ஏராளம்! அதைப்போல டாக்டர் அம்பேத்கர் தனது வாழ்க்கைச் செலவுகளில் தீண்டாமை கொடுமையை எதிர்த்து தன் சமுதாய மக்களுக்காகப் போராடிய சமுதாயப் போராட்டம், சட்டப் போராட்டங்கள் ஏராளம்.

இப்படியான தீண்டாமைக் கொடுமை ஒழிப்பதற்கு நீதிக்கட்சி, திராவிட இயக்கம் போன்ற சமுதாயச் சீர்திருத்த அமைப்புகள் கையில்

எடுத்தன. டாக்டர் நடேசன், டாக்டர் நாயர், சர்.பிட்டி. தியாகராயர் போன்ற மும்மூர்த்திகள் தென்னகத்திலே களத்தில் இருந்தனர். தந்தை பெரியார் அரசியலமைப்புச் சட்டத்தில் இட ஒதுக்கீடு எனும் சமூக நீதி வேண்டி, 1950 இல் முதல் திருத்தம் கொண்டு வரக் காரணமானார்.அண்ணா சமூக நீதி கள தல கர்த்தராக இருந்தார். கலைஞர் முதல்வராக இருந்தபோது சட்டநாதன் தலைமையில் குழு ஏற்படுத்தி அதன் அடிப்படையில் இட ஒதுக்கீடு சமூக நீதியை ஏற்படுத்தித் தந்தார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 16 விழுக்காடு என்பதை 18 அருந்ததியர்க்கு உள் ஒதுக்கீடாக 3 விழுக்காடும் என்றும், மலைவாழ் பழங்குடி மக்களுக்கு ஒரு விழுக்காடு என்றும்,மிகவும் பின் தங்கிய மக்களுக்கு 20 விழுக்காடு என்றும் என் தங்கிய மக்களுக்கு 30 விழுக்காடு என்றும் ஆக்கினார்.

அம்பேத்கர் பேரில் கலை கல்லூரி, சட்டக் கல்லூரி, சட்டப் பல்கலைக்கழகம், பாலங்கள்,அம்பேத்கர் நினைவு இல்லம் என்று உருவாக்கியசிறப்பு கலைஞர் உண்டு மேலும் மராட் வாடா பல்கலைக்கழகம் மும்பையில் பிரச்சனை வந்த போது, கலைஞர் அவர்கள் இலட்சக்கணக்கான தமிழ் மக்களைத் தந்தி அடித்து வைத்து, டாக்டர் அம்பேத்கர் பல்கலைக்கழகம் என்று பெயர் சூட்டிட ஏற்பாடு செய்தார். அதன்படியே டாக்டர் அம்பேத்கர் பேரையே மராட்டிய ஆளுநராக இருந்த அலெக்சாண்டர் சூட்டினார்.

மாநில அளவில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோருடைய சட்டபூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும் அவர்களுடைய முக்கியமான பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் தமிழ்நாடு மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம்உருவாக்கப்பட்டுத் தளபதி ஸ்டாலின் அவர்களால் பல்வேறு நலத்திட்டங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

தாழ்த்தப்பட்ட மக்கள் மீது மிகுந்த மரியாதை வைத்திருந்த கலைஞர் ஆட்சியில் தான் தாழ்த்தப்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த வரதராஜனை முதன் முதலில் உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் போன்றவற்றில் நீதிபதியாக ஆக்கி, அக்ரகாரத்து வழக்கறிஞர்கள் கூட My Lord என்று கூற வைத்தவர்.

கழக ஆட்சியில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தலைமைச் செயலாளராக முத்துசாமி ஐ.ஏ.எஸ், தனது முதலமைச்சர் செயலாளர்கள் ஒருவராக மலைவாழ் வகுப்பில் படுகர் இனத்தைச் சேர்ந்த சுந்தர தேவன் ஐ.ஏ.எஸ், காவல்துறை இயக்குனராக துரை ஐ.பி.எஸ்., சென்னை மாநகரக் காவல் ஆணையராக காளிமுத்து ஐ.பி.எஸ். என்பவரையும்,தமிழ்நாடு தேர்வாணைக்குழுத் தலைவராக முருகையன் என்பவரையும் நிர்வாகப் பரிபாலனம்செய்ய வைத்த பெருமை கலைஞருக்கு உண்டு.

கலைஞர் கழகத்தில் கிளைக் கழகம் முதல் ஒன்றிய, நகர, பேரூர், மாநகரம், மாவட்டம் துணைப்பொதுச் செயலாளர்கள் எனத் தலைமைக் கழகம் வரை தாழ்த்தப்பட்ட பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு

கவிஞர் தமிழ்தாசன்
கழகத் தீர்மானக் குழுத் தலைவர்

தகுந்த வாய்ப்பு தந்து, அண்ணா, கலைஞரைப் போல் தளபதியும் பெருமைப்படுத்தி வருகிறார்கள். அதுபோல, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், அமைச்சர்களாக ஆக்கப்பட்டு மக்கள் பணியாற்றிட வாய்ப்பு உருவாக்கித் தந்துள்ளனர்.

ஆனால், ஒன்றியத்தில் உள்ள பா.ஜ.க. அரசு மதவெறி பிடித்த இந்துத்வா அரசாக மாறி, தாழ்த்தப்பட்ட மக்களைத் துன்புறுத்தி நாடாளுமன்றத்தில் டாக்டர் அம்பேத்கரை பற்றிப் பேசினால் கடவுளைப் பற்றிப் பேசி இருந்தால் இந்நேரம், சொர்க்கம் கிடைத்திருக்கும் என்று அம்பேத்கரை இழிவுபடுத்தி உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசுகிறார், போன்ற மந்திரிகள் பேசுகிறார்கள்.

"தேசிய ஒற்றுமையும், மாநிலச் சுயாட்சியும் மக்களின் நாட்டுப் பற்றுக்குப் போட்டியாக அமைந்திருப்பதாகக் கருதக்கூடாது; ஏனெனில், உண்மையான கூட்டாட்சியில் அவைகள் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள்! தேச ஒற்றுமை, மாநில சுயாட்சியை அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும். நாடெங்கும் ஒற்றுமை உணர்வு இன்றி, மாநில சுயாட்சி நிலைக்க முடியாது" என்று ஒன்றிய – மாநில உறவுகள் பற்றிய கனடாவின் அரசர் குழு அறிக்கை தந்து எழுப்பி இருந்ததை என்பதை இங்கு நாம் நினைவுபடுத்த வேண்டும். ஆகவே மாநிலச் சுயாட்சிக் கொள்கையை எழுப்ப சரியான நேரம் இதுதான்! அதனை மிக சரியாகவே தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்.

டாக்டர் அம்பேத்கரின் கனவை நனவாக்கும் வகையில் செயல்பட்டு வரும் 'திராவிட மாடல்' அரசின் தளகர்த்தரான தளபதி அவர்களின் தளராத – அயராத பணிகளை வாழ்த்தி அவரை வணங்குவோம்.

கழக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு குன்றத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத் கலந்துக்கொண்டு உரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், கிளை செயலாளர் சத்தியமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் உள்ளனர்.

திராவிட இயக்க இளம் எழுத்தாளர் சு.விஜயபாஸ்கர் விபத்தில் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப்.14–

திராவிட இயக்க இளம் எழுத்தாளர் சு.விஜயபாஸ்கர் விபத்தில் மறைவுற்றதை யடுத்து, இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தி வருமாறு:–

திராவிட இயக்க இளம் எழுத்தாளர், சமூகநீதி தொடர்பான கட்டுரைகளை ஆய்வு பூர்வமாக முரசொலியில் தொடர்ந்து எழுதி வந்த தோழர் சு.விஜயபாஸ்கர் (வயது 40) நேற்று சென்னையில் விபத்தில் காலமானார் என்ற செய்தி அறிந்து பெரிதும் அதிர்ச்சியுற்றோம்.

ஜாதி மறுப்புத் திருமணம் செய்துகொண்ட கொள்கையாளர்; சிங்கப்பூரிலும் அம்பேத்கர் பெரியார் படிப்பு வட்டத்தில் துடிப்புடன் செயல்பட்டவர். EWSஉயர் ஜாதியினருக்கான பொருளாதார இடஒதுக்கீடு குறித்த அவரது தொகுப்பு நூல் மிக முக்கியமானதாகும்.

இளம் வயதில் இத்தகையோரை இழப்பது திராவிடர் இயக்கத்திற்கும், சமூகநீதி உணர்வாளர்களுக்கும் பெரும் இழப்பாகும். அவரது குடும்பத்தி னர் அனைவரும் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என இயக்கம் சார்ந்தோராவர். இவரது மறைவுச் செய்தி அறிந்து கழகத்தினர் அன்னாரது இல்லம் சென்று மலரஞ்சலி செலுத்தினர்.

இச்செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

பரிதி இளம்சுருதி எம்.சி. தலைமையில்

டாக்டர் அம்பேத்கர் 134 -வது பிறந்த நாள் விழா!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்குகிறார்!

சென்னை, ஏப். 14 -

எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் சட்ட மாமேதை புரட்சியாளர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் 134 வது பிறந்தநாளில் சமத்துவ திருநாள் விழா இன்று (14.4.2025) மதியம் 11 மணி அளவில் நேருபூங்கா நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு மேம்பாட்டு வாரிய குடியிருப்பு அருகில் நடைபெறுகிறது.

தி.மு.க அயலக அணி மாநிலத் துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதி இளம்சுருதி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ. வேலு, எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர் முன்னிலையில், எழும்பூர் தொகுதி 99 அ வட்ட கழகச் செயலாளர் சேகர், 99 வட்டக் கழக செயலாளர் ஆர். எம். ரங்கநாதன் முன்னிலையில், அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே. சேகர்பாபு திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்குகிறார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பாக முகவர்கள் கழக மூத்த முன்னோடிகள் பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்குமாறு பரிதி இளம்சுருதி கேட்டுக் கொண்டுள்ளார்.

க.கலைச்செல்வன் நிகழ்ச்சி ஏற்பாடு! ஐட்ரீம் மூர்த்தி - இரா.செந்தில்குமார் -வே.சிவக்குமார் பங்கேற்பு!

இராயபுரம் 49-வது வட்டத்தில் தண்ணீர் பந்தல்!

மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

சென்னை, ஏப்.14

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்குப் பகுதி 49-வது வட்டக்கழகம் சார்பில் சோலையப்பன் தெரு, அரசு மருத்துவமனை அருகில் வட்ட கழகப் பொறுப்பாளர் க.கலை செல்வன் ஏற்பாட்டில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரிம் இரா மூர்த்தி, இராயபுரம் கிழக்குப் பகுதி செயலாளர் இரா. செந்தில்குமார், பொதுக் குழு உறுப்பினர் வே.சிவகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் எல். சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சென்னை வடக்கு மாவட்டபொறுப்பாளர் ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ. தண்ணீர் பந்தல் திறந்து வைத்து பொது மக்களுக்கு இளநீர், மோர், ரோஸ்மில்க், தர்பூசணி உள்ளிட்ட பழங்களை வழங்கினார்.

இதில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் பி.டி.பாண்டி செல்லம், மாநில வழக்கறிஞர் துணை செயலாளர் மருது கணேஷ், க.நாகம்மை, த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், கட்பிஸ் ப.சோமசுந்தரமூர்த்தி, பொன்லட்சுமி, வழக்கறிஞர் மதன ராஜ், ஏ.வேணுகோபால், என். எழுமலை. சி.லிங்கேசன், சேகரன், சி.மனோகரன், வி.கலைச்செல்வன் மற்றும் வட்டகழக நிர்வாகிகள் எம்.பழனி, எம். வி.நரசுமணி, அ.குமார், கே. ஆர்.கோபிநாத், ஜி.கோ தண்டன், த.கு. பன்னீர்செல்வம், ஏ.கதி ரவன், ப.சுதாகர், கே.பாஸ்கர்,

ஆர்.பாரதி, ஜீ.விநாயகம், எஸ்.சங்கர், அரசு, கே.பாலகிருஷ்ணன், எம்.தங்கராஜ், ஆர். எம்.ராமமூர்த்தி, கன்னியப்பன், வி.சின்னசாமி, ஜி. ரேவதி, மோகனசுந்தரம் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

திரு.வி.க.நகரில் அம்பேத்கர் பிறந்த நாள் விழா!

மேயர் பிரியா 1000 பேருக்கு உணவு வழங்குகிறார்

சென்னை, ஏப். 14 -

இந்திய நாட்டின் அரசியலமைப்பு சட்டத்தின் தந்தை, சமூகத்தில் சமத்துவம் மலர வேண்டும் என்பதற்காக தன்னுடைய வாழ்நாள் முழுவதும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக போராடிய சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 136 வது பிறந்தநாளை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதலோடு திரு.வி.க நகர் 74 வது வட்ட கழகத்தின் சார்பில் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா தலைமையில் 1000 நபர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் செ. தமிழ்வேந்தன் , பகுதி துணைச் செயலாளர் ஆர்.ராஜன் , 74 ஆவது வட்ட கழக செயலாளர்கள் ஜி கிருஷ்ணகுமார் , எஸ். புஷ்பராஜ் மற்றும் திரளான கழக முன்னோடிகளும் கலந்து கொள்ள உள்ளனர்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

மாங்காடு நகரக் கழகப் பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

நகரக் கழகச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஏப்.14

மாங்காடு நகரக் கழகச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மாங்காடு நகர கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை (15.04.25 செவ்வாய்க்கிழமை) மாலை 4.00 மணியளவில் மாங்காடு ஆர்.கே.ராமச்சந்திரா திருமண மண்டபத்தில் நகர அவைத் தலைவர் எம்.எஸ். மகேந்திரன் தலைமையில் நடைபெற உள்ளது.

இதில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா. மோ.அன்பரசன் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார்.

எனவே நகர நிர்வாகிகள், வார்டு கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நகர மன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டு கொள்கிறேன். பொருள் 19.04.2025 அன்று கழகத்தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்கள் குன்றத்தூருக்கு வருகை தருதல் இவ்வாறு நகரக் கழகச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா தெரிவித்துள்ளார்.

தியாகராயர் நகர் பகுதி முன்னணி

கழகத் தோழர் எம்.மூர்த்தி மறைவு!

சென்னை, ஏப்.14–

சென்னை தென்மேற்கு மாவட்ட ஆட்டோ ஓட்டுநர் தொ.மு.ச. முன்னாள் மாவட்டத் தலைவர் தி.நகர் எம். மூர்த்தி நேற்று (13.4.2025) பிற்பகல் இயற்கை யெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த எம்.மூர்த்தி (வயது 73) தியாகராயர் நகர் பகுதியில் நீண்ட காலமாக கழகப் பணியில் ஈடுபட்டு வந்தவர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மறைந்த கு.க.செல்வம் அவர்களின் நெருங்கிய நண்பர்.

இச்செய்தியறிந்ததும் தியாகராயர் நகர் பகுதிக் கழகத் தோழர்கள் அன்னாரது இல்லம் சென்று மறைந்த எம். மூர்த்தி உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று (14.4.2025) மாலை 3 மணியளவில் தியாகராயர் நகர், எண்.6, தாமோதரன் தெருவிலிருந்து புறப்பட்டு கண்ணம்மா பேட்டை இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெறுகிறது.

செங்கல்பட்டு மாவட்டம், அச்சிறுப்பாக்கம் வட்டார சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் மூலமாக சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி ஒன்றியக் குழு பெருந்தலைவர் கண்ணன் தலைமையில் மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் தம்பு, கோகுலக்கண்ணன், எழிலரசன், உசேன், சிவக்குமார், வசந்தா மாலதி, பொன்மலர் , பார்த்தசாரதி, வெளியம்பாக்கம் சிவக்குமார், மேகலா , பொற்செல்வி , நந்தினி, சாவித்திரி சங்கர், சுரேஷ், ரத்தினவேலு, பேக்கரி ரமேஷ், பிரகாஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் அம்பேத்கர் பிறந்தநாள்– சமத்துவ நாள் உறுதிமொழி!

துறைமுகம் மேற்கு - கிழக்கு பகுதிக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி - எஸ்.ராஜசேகர் அறிக்கை!

சென்னை, ஏப். 14 -

துறைமுகம் மேற்கு பகுதிச் செயலாளர் எஸ்.முரளி - கிழக்கு பகுதிச் செயலாளர் எஸ்.ராஜசேகர் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் இன்று (14.04.2025 - திங்கட்கிழமை) காலை 9.00 மணியளவில் துறைமுகம் தொகுதி சட்டமன்ற அலுவலக வளாகத்தில் டாக்டர் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள் விழாவும் "சமத்துவ நாள்" உறுதிமொழி ஏற்பும் நடைபெற உள்ளது.

ஆகையால் நம்முடைய பகுதிகளுக்குட்பட்ட மாநில, தலைமை செயற்குழு, பொதுக் குழு, மாவட்ட, பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள்,

வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் பாகமுகவர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு துறைமுகம் மேற்குப் பகுதிச் செயலாளர் எஸ். முரளி, துறைமுகம் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.ராஜசேகர் ஆகியோர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

காஞ்சிபுரம் மாநகராட்சி, 1வது வட்டம், ஒலிமுகமதுபேட்டை தர்கா அருகில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.18.65 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பயணியர் பேருந்து நிறுத்த நிழற்குடை கட்டிடத்திற்கு, தி.மு.கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி, பணியினை துவக்கி வைத்தார். உடன், பகுதிக் கழகச் செயலாளர்கள் கே. திலகர், சு.வெங்கடேசன், சாகுல் அமீது ஆர். வினோத்குமார், பி.எஸ். குடியரசு, பா. தனலட்சுமி, மாமன்ற உறுப்பினர், கழகக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.